REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 21உ வெள்ளி (4—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 22உ சனி (5—1—57) [இதழ் 178

'கல்லூரிகளில் ஆங்கிலமே போதனு மொழியாக நீடிக்கவேண்டும்'

ஐதராபாத், சன. 2—

தேசிய மாணவர் சங்கத்தின் இரண்டாவது அகில இந்திய மாநாட்டில், 'பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், அண்மையில் சில கல்லூரிகளில் புகுத்தப்பட்டுள்ள கல்லூரித் தயாரிப்பு வகுப்பு பற்றி ஆராயவேண்டும்,' என்றும், 'போதனு மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டும்,' என்றும் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன.

மகாபாரத நியாய ஒத்திகை!

மனைவியை வைத்துச் சூதாடிய புதிய தருமன்!

புதிய பாஞ்சாலியை சூதில் வென்ற சூதன்

குழந்தைகளை அனுதைகளாக்கினுன்!

வியாசர் விருந்து வழங்கும் வாழ்க்கை முறை!

மொராதாபாத், (உ. பி.) —

வியாசர் வகுத்த வாழ்க்கை முறை, வடநாட்டின் சமுதாய அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பெண்களை உயிரற்ற சடப்பொருள்களாக மதித்து நடந்து கொள்ளும் பண்பாடு வடவருக்கு மட்டுமே உரித்தானது என்பதையும் ஏற்கனவே பன்முறை வலியுறுத்தி வந்துள்ளோம்.

ஒருத்தியை ஐவர் மணந்து வாழ்ந்ததையும், அதுவும் அரச குடும்பத்திலேயே அத்தகைய வாழ்க்கைமுறை அமைந்திருந்ததையும் விளக்கிக் கூறுவதுதான் வியாசர் விருந்தான 'மகாபாரதம்' என்பதை அனைவரும் அறிவர்.

ஐவருக்கு மனைவியான திரௌபதியை ஒரு பந்தயப் பொருளாக வைத்து, ஐவரில் மூத்தவரான தருமன் சூதாடித் தோற்று விடுகிறுன்.

இதோ, அப்படி ஒரு தருமன் உத்திர பிரதேசத்தில் தோன்றி இருக்கிறுன்!

வியாசர் விருந்தின் முடைநாற்றம், உத்திர பிரதேசத் தருமனின் அறத்தின் நீங்கிய செயலிலிருந்து வீசுகிறது.

மொராதாபாத் என்ற ஊரில் ஒருவன், தன் மனைவியை வைத்துச் சூதாடினுன்! அவளை வேறுஒருவன் சூதிலே வென்றுன்; அவளுக்கு இரண்டு குழந்தைகள்! 'அவளை மட்டுந்தான் சூதில் வென்றேனே ஒழிய, அவளுக்குப் பிறந்த அவ்விரு குழந்தைகளையும் நான் சூதாட்டத்தின்மூலம் பெற வில்லை; எனவே, அவளுடன் அக்குழந்தைகளையும் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு இல்லை' என, அவளை வென்ற சூதன் கருதலானுன்! எனவே, அவ்விரண்டு குழந்தைகளையும் ஒரு அனுதை விடுதியில் கொண்டு போய் விட்டுவிட்டு, அவன் வெளியேறிவிட்டான்.

இந்த வியாசர் விருந்தைத்தான் அன்பர் ஆச்சாரியார், தமிழ் மக்களுக்குக் கவர்ச்சிகரமான உரைநடையில், நமக்கு இப்பொழுது அளிக்க முன்வந்துள்ளார்.

தமிழ் நாட்டில் இந்திக்கு எதிர்ப்பு

எச்சரிக்கையுடன் நடந்துகொள்வாராம் நேரு!

இந்தூர், சன. 3—

காங்கிரசின் தெளிவற்ற கொள்கைகளை—கொள்கைகளின் 'வழவழா'த் தன்மையை நேரு பண்டிதர் கண்டித்துப் பேசிஞராம்!

'ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் கட்சியின் கொள்கை, அமைப்பு, படைத் திட்டம் இவற்றிற்கு எதிராக நிர்வாக இயந்திரம் சென்றுவிடாமலிருப்பதற்கு, நம்மிடையே திட்டவட்டமான கொள்கைகள் வேண்டும்' என்று அவர் கூறிஞராம்!

இந்திக்கு எதிர்ப்பு

கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கையில், நேரு மேலும் சொன்னுர்:— 'பொதுவாகச் சொல்ல வேண்டுமானுல், கட்சிக் கொள்கையை அமுல் நடத்தும் விஷயத்தில், சர்க்காரின் பலவீனமா அல்லது கொள்கைகளின் பலவீனமா எது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

"சென்னையில், இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது. இது போன்ற விவகாரங்களில் நாம் மிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். திட்டவட்டமான கொள்கை வேண்டும். நமது கொள்கைகளில் சில, விளக்கமாயில்லை. அவை நிச்சயமில்லாதனவாக — வழவழாவென்றிருக்கின்றன."

தேர்வுக் குழு - சுற்றுப் பயணம்

★

தென் ஆற்காடு மாவட்டம்:

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவரான பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தென்னுற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி அவர்களும கீழ்க்கண்ட தொகுதிகளில் நிலைமையைக் கண்டறிந்து அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப் பயணம செய்வார்கள் :—

6—1—57 காலை 10 மணி:
இடம்: 'தம்பி' அலுவலகம், சிதம்பரம்
தொகுதி: சிதம்பரம், சேத்தியாத்தோப்பு தொகுதிகள்

6—1—57 மாலை 5 மணி:
இடம்: வழிப்போக்கர் விடுதி, விருத்தாசலம்
தொகுதி: விருத்தாசலம், நல்லூர் தொகுதிகள்

7—1—57 காலை 9 மணி:
இடம்: வழிப்போக்கர் விடுதி, செஞ்சி
தொகுதி: சத்தியமங்கலம், செஞ்சி தொகுதிகள்

7—1—57 மாலை 3 மணி:
இடம்: வழிப்போக்கர் விடுதி, திண்டிவனம்
தொகுதி: திண்டிவனம் தொகுதி

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு பொதுச்செயலாளரால் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

★

நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள்:

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். முத்து ஆகிய இருவரும மேற்கண்ட மூன்று மாவட்டங்களிலும நிலைமையைக் கண்டறிந்து பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள் :—

10—1—57: இடம்: திருநெல்வேலி
தொகுதி: நெல்லை, காஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

11—1—57: இடம்: விருதுநகர்
தொகுதி: இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

12—1—57: இடம்: மதுரை
தொகுதி: மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

'ஜனநாயகப் பாதையிலிருந்து விலகிச் செல்லமாட்டேன்'

'காங்கிரஸ் சோஷலிச'த்திற்குப் பண்டித நேரு தரும் விளக்கம்

இந்தூர், சன. 3—

"சனநாயகப் பாதையிலிருந்து நழுவிச் செல்ல எந்தக் காரணத்தாலும் நான் விரும்பவில்லை" என்று, பண்டித நேரு கூறினுராம்!

"ஏழ்மையில் எல்லோரும் சமம் என்று கூறுகிற ஒரு சோஷலிசத்தை நிர்மாணிக்க நாம் விரும்பவில்லை.

"தற்போது, உயர்வான வாழ்க்கை படைத்துள்ள சிலரை, தாழ்நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் நாம் கூறவில்லை.

"சோஷலிசம் என்றுல் நாம் கொள்ளும் பொருள், 'எல்லோரையும் முன்னேற்ற வேண்டும்; எவரையும் பின்னுக்கு இழுக்கக் கூடாது' என்பதே!

"பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையில் ஒரு பெரும் பிளவு இருப்பதையும் நான் விரும்பவில்லை.

"ஆனுல், எல்லா மக்களையும் முன்னேற்ற வேண்டும் என்ற விரிவான இலட்சியத்தில் குறுக்கிடுகிற சிலரைக் கீழிறக்கும் எந்த வித நடவடிக்கையையும் நான் மேற்கொள்ளமாட்டேன்,"

என்றும் பண்டிதர், காங்கிரசின் சோஷலிசத்திற்கு வியாக்கியானம் தந்தாராம்.

ஆழ்கடல் ஆயுதம்!

கடலுக்கு-கீழ் நீ-மூழ்கி (சப்மரீன்) யிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் செல்லும் கப்பல்கள்மீது பிரயோகம் செய்யக் கூடிய புதிய ஆழ்கடல் ஆயுதம் ஒன்றை அமெரிக்கக் கடற்படை தற்போது கண்டுபிடித்துள்ளது.

இதற்குப் 'போலாரிஸ்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதென்றும் இன்னும் 5 ஆண்டுகளில் இந்த ஆயுதம கடற்படையில் சேவை செய்வதற்குத் தயாராகிவிடுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அந்த உண்மை!

காங்கிரஸ் ஓட்டுச் சேகரிப்பது எப்படித் தெரியுமா?

அந்த உண்மையை காங்கிரஸ் வட்டாரங்களே கூறுகின்றனவாம்!

சென்னை பத்திரிகையின் நிருபர் ஒருவர், இந்தூரிலிருந்து எழுதியிருக்கிறுர்.

நேரு பெருமான், புனரமைக்கப்பட்ட எல்லா மாநிலங்களுக்கும் செல்வாராம், தேர்தல் பிரச்சாரத்திற்காக!

அவர்தான், எங்கும் காங்கிரசுக்கு நிச்சயமாக ஓட்டுச் சேகரித்துத் தரும் ஒரே நபராம்! காங்கிரஸ் வட்டாரங்கள் இப்படிக் கூறுகின்றனவாம்!

சென்ற தேர்தலின்போதைவிட, இப்போது நேரு, குறைவான அளவே தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவாராம்!

சென்னை பல்கலைக் கழக நூற்றுண்டு விழா

ஊழியர்களுக்கு ஒரு மாத 'போனஸ்' தரப்படுமாம்

சென்னை, சன. 2—

சென்னை பல்கலைக் கழகம் நிறுவப்பட்டு 100 ஆண்டுகள் ஆகிறது. இந்த நூற்றுண்டு விழாவை முன்னிட்டு சென்னை பல்கலைக் கழக ஊழியர்களுக்கு ஒருமாத போனஸ் தரப்படுமாம்.

மேலும், மாதம் ரூ. 3,000-க்குக் குறைவான சம்பளம் வாங்கும் அனைவருக்கும் கிராக்கிப்படியில் ரூ. 5 அதிகப்படுத்தப்படுமாம்.

சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றுண்டு விழாவை இம்மாதம் 28-ந் தேதியிலிருந்து சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு நடக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—1—'57 வெள்ளி

அது பலிக்காது!

இருநூறு ஆண்டுக் கால ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் வடநாடு, தொழில் துறையில் தென்னாட்டைவிடப் பல மடங்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும். அத்தகைய ஏற்றத்தாழ்விற்கு எது காரணமாக இருந்தபோதிலும், எவர் பொறுப்பாளர்களாக இருந்த போதிலும், வடக்கைக்காட்டிலும் தெற்கு தொழில் துறையில் ஏகாதிபத்தியக் காலத்தில் அலட்சியப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பது என்னவோ முக்காலும் உண்மையாகும்.

ஏகாதிபத்திய ஆட்சியினால், தொழில் துறையில் தென்னாட்டிற்கு அறிந்தோ அறியாமலோ இயற்றப்பட்டுவிட்ட கேட்டிற்கு, எட்டாண்டு சுதந்திர ஆட்சிக் காலத்திற்குள் பரிகாரம் தேடப்பட்டு இருக்கும் என எதிர்பார்ப்பதுதான் நியாயமானதாகும். ஆனால், நடைமுறையில் நாம் எதைக் காண்கிறோம்? நியாயமாக எவரும் எதிர்பார்ப்பதற்கு மாறாக ஏகாதிபத்தியக் காலத்தில்தென்னாட்டின்மீது திணிக்கப்பட்டு வந்த தொழில் துறை பிற்போக்கை வேண்டுமென்றே, கடந்த எட்டாண்டு காலமாக சுதந்திர ஆட்சி பிடிவாதமாகப் பாதுகாத்து வருவதைத்தான் காண்கிறோம்.

ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் ஒரே மட்டமாகத் தொழில் துறையில் வளர்ச்சி பெறவில்லை. அதாவது துணைக் கண்டம் முழுவதிலும் தொழில்கள் பரவலாக ஏற்படுத்தப்படவில்லை.

தனது நாட்டின் நலத்தை மட்டுமே கருத்துள்கொண்டு, ஒழுங்காகத்திட்டமிடாதுமனம் போன போக்கில் தொழில்களை பிரிட்டானிய ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்தில் நிர்மாணித்தது.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவலாகத் தொழில்களை ஏற்படுத்துவதில்தான், ஒவ்வொரு பகுதி மக்களும் ஒத்த நிலையில் நல்வாழ்வைப் பெறுவது சாத்தியமாகும் என்ற உயர்நியாயத்தைப் பிரிட்டானி ஏகாதிபத்தியம் பின்பற்றக்கூடும் என்பதை எவரும் எதிர்பார்க்கவும் முடியாது—கூடாது.

ஆனால் பிரிட்டானிய ஏகாதிபத்தியம் செய்து வந்தது போன்றே, அதைப் பின்பற்றி சுதந்திர ஆட்சி நடந்துகொள்ளுவது கூடாது. அது மன்னிக்கக்கூடாததுடன், வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாகும்.

பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தில் ஒழுங்கற்ற தொழில் கொள்கையின் காரணமாக, பலமடங்கு பின்னணியில் தொழில்துறையில் இருந்துவரவேண்டிய கட்டாயம் தென்னாட்டிற்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, தொழில் துறையில் முன்னேற்றம் பெற்றுள்ள வடநாட்டிற்கு ஒப்ப அல்லது கொஞ்சம் ஏறத்தாழத் தென்னாட்டையும் அத்துறையில் முன்னேற்றுவதற்கான முதற்சலுகையை தென்னாட்டிற்கு அளித்திருக்க வேண்டியதுதான் இந்தியப் பேரரசின் நீங்காக் கடமையாகும். அந்த நீதியைத்தான் இந்தியப் பேரரசிடமிருந்து நல்லறிவு படைத்த எவரும் எதிர்பார்க்கக்கூடும்.

ஆனால் இந்தியப் பேரரசோ என்ன செய்திருக்கிறது?

தொழில் துறையில் பல வகைகளிலும் முன்னேற்றம் பெற்றுள்ள வடநாட்டிற்குச் சமமாக அல்லது பாதி அளவிலாவது தென்னாட்டைத் தொழில் துறையில் முன்னேறச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள, இந்த எட்டாண்டுக் காலத்தில் இந்தியப் பேரரசு முன்வரவே இல்லை.

அவ்வாறு முன்வராததுடன், பிரிட்டானிய ஏகாதிபத்தியப் பாதையிலேயே சென்று, ஏற்கனவே தொழில்வளம் மிகுந்த வடநாட்டை மேலும் தொழில் வளமுள்ளதாக்குவதிலேயே கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டு வந்திருக்கிறது—வருகிறது.

நிறைவேற்றப்பட்டுள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டமும், துவங்கப்பட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும், தொழில் துறையில் தென்னாட்டை மட்டந்தட்டிவரும் இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கை மெய்ப்பிப்பனவாக உள்ளன.

அதே நேரத்தில், ஏகாதிபத்திய காலத்திலேயே தொழில் வளம் பெருத்திருந்த வடநாட்டில் மேலும் பலப்பலவிதமானத் தொழில்களை நிர்மாணிப்பதில் இந்தியப் பேரரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதையும், அதே இரண்டு திட்டங்களில் இடம்பெற்றுள்ள தொழில் ஏற்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொழில் துறையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்றக் குற்றச்சாட்டை நாம் மட்டுமே கூறிவரவில்லை. திராவிடப் பகுதியில் உள்ள காங்கிரசு அமைச்சர்கள் அனைவருமே இக்குற்றச்சாட்டை வாய்ப்பு நேருகிறபொழுதெல்லாம் கூறிவருகின்றனர்.

தென்னாட்டுத் தொழிலதிபர்களும் இவ்வாறு குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இவ்வாறு குற்றஞ்சாட்டி வருகிறவர்கள் எவரும், அவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், எவ்விதத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களாக இருந்துவந்த போதிலும், 'வடக்கு-தெற்கு' என்று தெளிவாகவும் ஆணித்தரமாகவும் குறிப்பிட்டுப் பேசாமல் இருப்பது கிடையாது. இந்த 'வடக்கு-தெற்கு' பேச்சு, சட்ட சபைகளிலும் மக்கள் சபையிலும் பலமுறை எழுந்துள்ளது.

ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் தொழில்துறையில் வடநாடு வளர்ந்தும் தென்னாடு பின்தங்கியும் இருந்துவிட்ட காரணத்தால், வடநாட்டிற்கொப்ப தென்னாட்டைத் தொழில் துறையில் முன்னேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்ட இந்தியப் பேரரசு தம்மிச்சையாக முன்வந்திருக்க வேண்டும். அத்தகு சலுகையை வடநாட்டைவிடத் தென்னாடு தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கின்ற காரணத்தால், இந்தியப் பேரரசிடமிருந்து எதிர்பார்க்கத் தென்னாட்டிற்கு முழு உரிமை உண்டு.

அந்தத் தென்னாட்டிற்குள்ள உரிமையை இந்தியப் பேரரசு அலட்சியப்படுத்தி விட்டது.

அடுத்தாற்போல், இந்தியப் பேரரசு போட்ட தொழில் திட்டங்களில், தென்னாட்டிற்குரிய பங்கைத் தம்மிச்சையாக அவ்வரசு ஒதுக்கி இருக்க வேண்டும். அவ்வகையில், தமக்குரித்தான பங்கைக் கேட்கும் உரிமை தென்னாட்டிற்கு என்றும் இருக்கிறது.

ஆனால் இந்தியப் பேரரசோ, தொழில் துறையில் தென்னாட்டிற்குச் சலுகையும் காட்ட முன்வரவில்லை; தென்னாட்டிற்குரித்தான பங்கை நியாயமாக வழங்கவும் முன் வரவில்லை. அந்த நேரத்தில் தொழில் வளம் மிகுந்த வடநாட்டில் மேலும் வித்விதமான தொழில்களைக் குவிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், 'வடநாடு வாழ்கிறது—தென்னாடு தேய்கிறது' என்ற உண்மையை உரைப்பவர்கள்மீது சீறி விழவும் செய்கிறது. கண்ணுக்கு நேராகக் காணும் உண்மையை இனிக்கும் பேச்சினால் இல்லாமல் செய்துவிடலாம் என்றும் கனவு காண்கிறது இந்தியப் பேரரசு. அது பலிக்காது என்பதை இந்தியப் பேரரசிற்கு எச்சரிக்கிறோம்.

நாள்தோறும் 10-இலட்சம் பவுன் நஷ்டமாம்!

சூயஸ் கால்வாயை மூடியதால் நாளதோறும் 10-இலட்சம் பவுன் நஷ்டம் ஏற்படுகிறது என்றும், எனவே, கால்வாயில் தடையை அகற்றும் வேலை மிகவும் முக்கியமானதென்றும் கூறப்படுகிறது.

'வடவர் திராவிட மொழிகளை கற்க வேண்டும்'

'தென்னவர் இந்தி கற்பது கடினம்'

'ஆனால், வடவர் திராவிட மொழி பயிலுவது கடினமல்ல'

1948-ல் வினோபா பாவே கூறியதென்ன?

நமது நாட்டின் நல்ல தொண்டராக ஒருவர் ஆக வேண்டுமானால் அவர் திராவிட இனத்து நெடுங்கணக்கு (எழுத்து வரிசை)ஒன்றையும் கற்றுக்கொண்டு ஆகவேண்டும் என்பது வினோபா பாவே அவர்களின் முடிவாகும்.

"அப்படிக் கற்றுக்கொள்ளாமல் இருக்கும்வரையில், அனைத்து இந்திய ஒற்றுமையை அடைந்துவிட முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது" என்கிறார்.

அவர் மேலும் சொல்லுகிறார்:—

"எனது சொந்த அடைவில் (அநுபவத்தில்)இருந்து கூறுகிறேன். வடஇந்திய மொழிகளைத் தென்னிந்தியர் ஒருவர் கற்றுக்கொள்வது மிகக் கடினம். அம்மொழிகளில் பாலைப் பற்றிய (ஆண்பால் பெண்பால் முதலிய) குழப்பங்கள் நிரம்ப உண்டு. ஆனால், தென் இந்திய மொழிகளை வடஇந்தியர் ஒருவர் கற்றுக்கொள்வது அவ்வளவு கடினம் ஆகாது. கடினம் இருக்கிறதோ இல்லையோ, நாம் செய்யக் கடமைப்பட்டதைச் செய்வதற்கு ஏதும் முயற்சி எடுக்காமல் இருந்துகொண்டு, நாட்டின் ஒற்றுமையின் பேரைச் சொல்லி, தென் இந்தியர் இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவது நமக்கு அழகு ஆகாது. அது கட்டாயம் பயன்படப்போவதில்லை"

இது, திரு. வினோபா பாவே அவர்கள், சர்வோதய இயக்கத்தை வடக்கே துவக்கிவைத்தபோது மொழிந்தது—'அரிசன்' வாரத்தாளில் 11—4—1948 தலையங்கத்தில் குறிக்கப்பட்டது.

—இவ்வாறு, 1-1-57 'தமிழ் நாடு' இதழில், கி. இராமலிங்கனார் எம்.ஏ., அவர்கள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தொழில் நுணுக்க நாகரீகத்திற்கு இந்தியா மாறுவதின் விளைவு?

விவசாய நிலப் பரப்பில் பற்றுக்குறை ஏற்படுமென அச்சமா?

"இந்தியாவிலுள்ள நிலங்களை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றி நிலக்கூறு நிபுணர்கள் ஒரு நகல் திட்டம் தயாரிக்கவேண்டும்; நகரங்கள் அமைப்பு, தொழில் ஓய்வு நிலையங்கள் கட்டுதல், இரயில்வே பாதைகள்—நெடுஞ்சாலைகள் போடுதல் ஆகியவைகளில் அதிகப்படியான நிலம் போய்விடாமல் தவிர்க்குமாறு இந்தத் திட்டத்தை அமைக்க வேண்டும்" என்று திட்டக் குழு உறுப்பினரான டாக்டர் சி. ஜெ. கோஷ் வற்புறுத்தியுள்ளார்.

இந்தத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியுள்ள அவசியத்திற்கான காரணம் பற்றி அவர் குறிப்பிடுவதாவது:—

"விவசாய-நீர்ப்பாசன நாகரீகத்திலிருந்து தொழில் நுணுக்க நாகரீகத்திற்கு மாறும் கட்டத்தில் இந்தியா தற்போது இருக்கிறது; இதனால் கிராமங்களிலிருந்து வெளியேறி மக்கள் அதிகமாக நகரங்களுக்கு வந்துவிடுவர். கடந்த 15 ஆண்டுகளில் ஏராளமான பேர் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடியேறியுள்ளனர்; இதனால், நகரில் வாழ்வோர் தொகை மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதத்திலிருந்து 17 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

"இன்னும் 30 ஆண்டுகளில் நாட்டிலுள்ள மொத்த மக்களில் பாதிப்பேர் நகரங்களில் வாழ்வார்கள்; அதாவது, மேலும் மேலும் அதிகப்படியான நிலங்கள், கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையாக இருக்கும்; இதனால், உணவு உற்பத்திக்கு வேண்டிய நிலங்களின் பரப்பு குறைந்துவிடும். ஆனால் அதே சமயம் மக்கள் தொகை உயர்ந்திருக்குமாதலால், விவசாய நிலப்பரப்பு குறைவாக இருக்கும். ஆகவே, நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்த நிலக்கூறு வல்லுநர்கள் வழிகூற வேண்டும்."

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது...

'ஆந்திர மாநிலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை அமையுங்கள்'

வடவரின் மனப்போக்கை உணர்த்தும் கவர்னரின் முறையீடு

ஐதராபாத், சன. 2—

ஆந்திராவில் ஒரு இரும்புத் தொழிற்சாலை வேண்டுமென்று கோருவதில் சர்வ நியாயமும் உண்டு என்று கூறிய ஆந்திர பிரதேச கவர்னர், வடநாட்டுப் பெரியவர்களின் மனோபாவத்தை உணர்ந்தோ என்னவோ, 'ஆனால், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட வேண்டாம்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஒரு உருக்குத் தொழிற்சாலையை ஆந்திராவில் நிறுவ வேண்டும்' என்று கூறினாராம்!

அகில இந்தியத் தொழிற் கண்காட்சி ஒன்றைத் துவக்கிவைத்த அவர் மேலும் பேசுகையில், 'ஆந்திர சர்க்கார் வற்புறுத்தவேண்டிய இடத்தில் வற்புறுத்துவார்களேயானால், விசாகப்பட்டினத்தில் ஒரு டீசல் எஞ்சின் தயாரிக்கும் கனரகத் தொழிற்சாலையையும், சிங்கரேனியில் ஒரு உரத் தொழிற்சாலையையும் துவக்கமுடியும்; வற்புறுத்த வேண்டிய இடத்தில் வற்புறுத்தினால், அவர்கள் வேறாக் காதினராக இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்' என்றும் கூறினாராம்!

மைசூர் அரசாங்க ஊழியர்களின்

சம்பள உயர்வு விவரம்

பெங்களூர், சன. 1—

மைசூர் மாநில அமைச்சரவை அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தத் தீர்மானித்துள்ளதல்லவா?

ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள பெரிய நகரங்களில் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 50 ஆக இருக்கும்; மற்ற இடங்களில் கிராக்கிப்படி உள்பட மொத்தம் ரூ. 45 ஆக இருக்கும்.

பம்பாய், சென்னை, கேரள மாநிலங்களின் அரசாங்க ஊழியர்கள் சம்பள விகிதங்களைவிட மைசூர் மாநில அரசாங்க ஊழியர்களின் புதிய சம்பள விகிதம் உயர்வு மிக்கதாம்.

இதனால அரசாங்கத்திற்கு ரூ. 4 கோடி அதிகமாகச் செலவாகுமாம். ரூ 100-ம், அதற்குக் குறைவாகவும 'பென்ஷன்' பெறுபவர்களுக்குக் 'கிராக்கிப்படி' சற்று அதிகமாகக் கிடைக்குமாம்.

அமைதிச் சக்திகள் வலுவடைந்துள்ளதாம்!

"உலகில் மீண்டும் ஒரு போரை ஏற்படுத்த முயலுபவர்களைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு அமைதிச் சக்திகள் இப்போது வலிமை மிக்கதாக இருக்கின்றன," என்று ரஷ்ய பொதுவுடைமைக் கட்சித் தலைமை செயலாளரான நிகிதா குருஷ்சேவ் கூறியுள்ளார்.

கழகச் செய்திகள்

கனியாபட்டி தி. மு. கழகத் துவக்க விழா

4—12—56 மாலை, கனியாபட்டி தி. மு. கழகத் துவக்க விழா தோழர் மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மணி, பாராங்குசம், முகிலன், அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினபின் தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினார். பல கிளைக் கழகங்கள் சார்பில் தோழர்களுக்கு மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் மு. கருணாநிதி அவர்கள் பசுமலைப்பட்டி, சதநிய மங்கலம், உப்பிலியக்குடி ஆகிய ஊர்களில் கழகக் கொடிகளை ஏற்றுவித்தார்.

பிராக்கிராமம் தி.மு. கழகத் துவக்க விழா

9-12-56 மாலை 6½ மணிக்கு, பிராக்கிராமம் தி மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் க. கணபதி தலைமையில், திட்டச்சேரி மன்சூர் கால்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது. இசைமுரசு தோழர் நாகூர் அனீபா இசைவிருந்தளித்தார். தோழர்கள் அம்பில் தருமலிங்கம், எம் எஸ். மணி. ஜி. பாராங்குசம் எஸ் எம். வைத்தியலிங்கம் ஆகியோர் பேசியபின், தோழர் மு. கருணாநிதி அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

தொளசம்பட்டியில் தி. மு. கழக அமைப்பு

3—12—56 மாலை 6 மணிக்கு சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுகாவிலுள்ள தொளசம்பட்டியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் ப. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். பழனியப்பன், டி. வி. வெங்கட்டராமன், மு. இராசதுரை, கு. கந்தசாமி ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 9 பேரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பர்மா தி. மு. கழகம்

9-12-56 பிற்பகல் 3 மணிக்கு, பர்மா தி. மு. கழகப் பணிமனையில் தோழர் ஓ. எம். சிவராமன் தலைமையில், பொங்கல் விழா கொண்டாடுதல், கழகக் கொள்கைகளைப் பரப்ப நாடகக் குழு அமைப்பது குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் ஒன்றில், தோழர்கள் மு. வெ. சாமி, கே. எம். கணபதி, எஸ் கன்னையா, இராம. முத்தழகு ஆகியோரை முறையே செயலாளர் துணைச்செயலாளர், பொருளாளர் கணக்குப் பார்வையாளராகக் கொண்ட பொங்கல் விழாச் செயற்குழுவும், 11 பேர் கொண்ட விளம்பரக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 14 பேரைக் கொண்ட கே. வி கே. சாமி நாடக மன்றச் செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இறுதியில் டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிடம் அனைவரும் எழுந்து மௌனமாக நின்று, பின்னர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஏரல் தி. மு. கழகம்

16—12—56 மாலை 5½ மணிக்கு கழக மாடியில் தோழர் இரா சிவபெருமான் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தேர்தல் நிதி அனுப்புவது குறித்து முடிவு செய்யப்பட்டதுடன், வரவு செலவுக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டது. பின்னர், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

மதுரையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

15-12-56 இரவு 7 மணிக்கு மதுரை நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் இராசமாணிக்கம் சிறிது நேரம் பேசியதும், இறுதியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பொதுக்கூட்டத்தில், பொன்னகரம் பகுத்தறிவுப் படிப்பகச் சார்பில் ரூ. 40-ம், சந்தையில் பழைய இரும்புக் கடை வைத்திருப்போர்களால் ரூ. 13-ம், ஒரு பெண் மகவுக்கு 'மலர்க்கொடி' என்று பெயரிட்டதின் நினைவாக ரூ 1-ம், ஒரு ஆண் மகவுக்கு 'செங்குட்டுவன்' எனப் பெயரிட்டதின் நினைவாக ரூ. 1-ம், தோழர் சின்னக்கனி ரூ. 1-ம், மற்றுமொரு தோழர் ரூ. 1-ம் ஆகமொத்தம் ரூ. 57 தோழர் சம்பத் அவர்களிடம் தி மு. கழகத் தேர்தல் நிதிக்காகத் தரப்பட்டது.

சிவகாசியில் கழகப் பொதுக்கூட்டம்

16—12—56 இரவு 7 மணிக்கு, இவ்வூர் சிவன்கோயில்முன், தோழர் இரா. பொ. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் என் கே. குருசாமி, வே கருணாகரன், ஏ. எஸ் கனி மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

காஞ்சீபுரம் நகர தி. மு. க.

9-12-56 காலை 10 மணியளவில் காஞ்சீபுரம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், செங்கழுநீர் ஓடைவீதி எண் 19 இல்லம் மேல் மாடியில் தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. அக்கட்டிடத்தை நகர தி. மு கழக மத்தியக்குழுவிற்கு நகரச் செயலாளர் பேசி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததற்கு ஒப்புதல் அளித்தும், முன் பணமாகக் கட்டிடச் சொந்தக்காரருக்கு ரூ 14 கொடுப்பதை அனுமதித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், தேர்தல் நிதி திரட்டுவது குறித்தும் மற்றும் பல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மணிநகர் (ஆமதாபாத்) தி. மு. கழகம்

16—12—56 காலை 9 மணிக்கு மணிநகர் பத்ராவாலாசாலில் தோழர் ச. சந்திரன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தின் வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், தோழர்கள் வி. நாகராசன், மு. சாமிதுரை, சா. ஆறுமுகம், மு. சுப்பராயன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேங்கைவாடி தி. மு. க.

28—11—56 மாலை 6 மணிக்கு கள்ளக்குறிச்சி வட்டம் வேங்கைவாடி தி மு. கழகத் துவக்க விழா தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆனைமுத்து, சதாசிவம், இரகுராமன், மு பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்—தாணா தி. மு. க.

13—12—56 மாலை 6 மணிக்கு தோழர் பி. மாடசாமி இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழக வரவு-செலவுகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், விரைவில் தேர்தல் நிதி அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலந்தூர் தி. மு. கழகம்

7—12—56 இரவு 10 மணிக்கு, தோழர் எஸ். பாலன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கூடிய விரைவில் தேர்தல் நிதி திரட்டுவதென்றும், தோழர் இராவணன் தொடர்ந்து மூன்று செயற்குழுக் கூட்டங்களுக்கு வராததால் செயற்குழுவிலிருந்து அவரை நீக்கியும், துணைச் செயலாளரின் போக்கினைக் கண்டித்தும், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சத்திரவாடி தி. மு. கழகம்

13—12—56 மாலை 5½ மணிக்கு சத்திரவாடி தி மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் என். பி. வீராசாமி தலைமையில் நடைபெற்ற போது, விரைவில் தேர்தல் நிதி அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜனவரி

15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)
16: காஞ்சிபுரம்
17: சேலம் நகர்
18: உடுமலை
19: கணியூர்

ஜனவரி

20: மதுரை நகர்
21: திருச்சி நகர்
22: குமாரபாளையம்
23: போளூர் வ.ஆ.
24: விழுப்புரம்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு க' என்ற எழுத்துக்களும் கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தாரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணா 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள்: 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆத்தூர் நகர தி. மு. க.

15-12-56 மாலை 6½ மணிக்கு, ஆத்தூர் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். பி சுப்பிரமணியம் எம் எல்.ஏ. இல்லத்தில் தோழர் வி. எம். இரங்கசாமி தலைமையில் நடைபெற்றது தோழர் பி. எம். இரங்கசாமி தலைமையில் தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ, கே. நாராயணசாமி, பி அருணாசலம், டி கே. மாதவன், கே. முத்து, ஜி கந்தசாமி, ஜி. கிருஷ்ணன், எல். வெங்கட்ராமன், எஸ். சங்கரலிங்கம், கே. எஸ். மணி ஆகியோர் கொண்ட தேர்தல் நிதி வசூல் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது மற்றும், 1955-56-ம் ஆண்டு வரவு-செலவு கணக்குகள் சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டன. டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாச்சியார்கோவில் தி.மு.க.

14—12—56 அன்று நாச்சியார் கோவில் தி. மு க. சார்பில் கழகச் செயற்குழுக்கூட்டம் தோழர் துரை தலைமையிலும், தோழர்கள் இரா கன்னையன், எல். கல்லக்கண்ணு ஆகியோர் தலைமையில் முறையே டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் மறைவு அனுதாபக் கூட்டங்களும் நடைபெற்றன. செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். கோவிந்தராசன், இரா பாண்டுரங்கன் ஆகியோர் முறையே செயலாளர், விளம்பர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அம்பேத்கார் மறைவு அனுதாபக் கூட்டத்தில் தோழர் பாண்டுரங்கனும், இசைப் பெரும்புலவர் இராசரத்தினம் மறைவு அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் இரா. பாண்டுரங்கன், இரா. சம்பந்தன், இரா. கன்னையன், ம அருணாசலம் ஆகியோரும் பேசினர் அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

எளம்பிள்ளை தி. மு. கழகம்

12—12—56 மாலை 7 மணிக்கு, எளம்பிள்ளை தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் வ. செங்கோட்டன் தலைமையில் தோழர் எஸ். கந்தசாமி இல்லத்தில் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார், தோழியர் விசாலாட்சி-இளம்வழுதி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திருக்கோவிலூர் தி. மு. க.

16—12—56 மாலை 4 மணிக்கு, தோழர் கீர்த்தி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், கீழையூர், சந்தைப்பேட்டை கிளைத் தோழர்கள் கலந்துகொண்டு, திருக்கோவிலூர் நகரக் கழகம் அமைப்பது குறித்துக் கருத்துரை வழங்கினர். முக்கிய முடிவு மேற்கொள்ளப்பட்டன.

ஆமதாபாத் நரோடா தி. மு. கழகம்

16—12—56 மாலை 5 மணிக்கு, ஆமதாபாத் 8-வது வட்டம் நரோடா தி. மு. கழகத்தில், தோழர் இரா. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் கு பாலசுந்தரம், சு. பாபு, சு. செபக்கண்ணு ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மற்றும் மாவட்டப் பிரதிநிதிகளும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம் 18-வது வட்ட தி. மு. கழகம்

14—12—56 இரவு 10 மணிக்கு கிளைக் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார், விசாலாட்சி—இளம்வழுதி, இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாமிசெட்டிபட்டி தி. மு. க.

14—12—56 மாலை 6 மணிக்கு, தோழர் எஸ். வி. முனியன் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். ஜி. காளிதாஸ், ம. கோணப்பன், எஸ். டி. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தேர்தல் நிதி வசூலிப்பதென்றும், இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடையம் தி. மு. கழகம்

15-12-56 இரவு 9 மணிக்கு, கடையம் தி. மு கழகக் கட்டிடத்தில் தோழர் பி. அய்யாதுரை தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டதுடன், தோழர் இருதயராசனைத் தற்காலிகத் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் தேர்தல் நிதி பற்றியும் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தாண்டுப் புது நாளில் வெளியேறிவிட்டனர்!

கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகியதற்குக் காரணம்!

ரோம், ஜன. 3—

புத்தாண்டு நல்ல நாளில் இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து 6 இத்தாலிய இடதுசாரி மேதைகள் இராஜினாமா செய்துள்ளனர்.

சோஷலிச நிர்மாணத்தை நோக்கி இத்தாலியக் கம்யூனிஸ்டு கட்சி தனது சுய விருப்பப்படி செல்ல முடியாமலிருப்பதே தங்களுடைய விலகுதலுக்குக் காரணம் என்று அந்த அறுவரும் கூறியிருக்கின்றனராம்.

திருவனந்தபுரத்தில் அர்த்தால்

இருமுறை தடியடிப் பிரயோகம்

உயர் நீதிமன்றக் கிளர்ச்சி வலுக்கிறது

திருவனந்தபுரம், ஜன. 3—

இங்கு உயர் நீதிமன்றக் கிளை ஒன்றுவேண்டும் எனக் கோரி நடைபெற்றுவரும் மறியல் போராட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெற்றபோது சர்க்கார் அலுவலகத்தின் முன்னால் போலீசார், அறப்போர் தொண்டர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்து கொடுமைப் படுத்தியிருக்கின்றனர். அத்துடன், பல தொண்டர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

அர்த்தால்

நேற்று நகரசபைத் தலைவரையும் (மேயர்), மற்றும் தலைவர்களையும் போலீசார் கைது செய்ததைக் கண்டிக்கும் வகையில், இன்று நகர் முழுவதும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் நகர சபை ஊழியர்களும் இன்று வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

கருப்புக்கொடிகளை ஏந்தியவண்ணம், ஏராளமான பெண்கள் உட்பட நகர சபை ஊழியர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றும் நடத்தி, நகரசபைத் தலைவர் கைது செய்யப்பட்டதற்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.

கல்லெறி !

மறியல் போராட்டம் நடைபெறும்போது, கூட்டத்திலிருந்து யாரோ சில காலிகள் கல்லெறிந்தனராம்; அதன் காரணமாக இரண்டாம் முறையாகவும் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

வழக்கு

ஏற்கனவே கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட பலருக்கு ரூ 20 அபராதம் அல்லது 20 நாள் சிறைவாசம் என்பனபோன்ற தண்டனைகள் தரப்பட்டிருக்கின்றன.

இத்தனை அடக்குமுறைகளுக்குப் பிறகும் கிளர்ச்சி வலுத்துக்கொண்டே இருக்கிறது.

நேருவுக்குப் பிறகு யார்?

மீண்டும் கேள்வி எழுப்புகிறது காங்கிரஸ் இதழ்!

இந்தூர், ஜன. 3—

நேருவுக்குப் பிறகு இந்தியாவின் தலைவர் யார ?

காங்கிரஸ் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்டுள்ள மலர்ஒன்றில், பெயர் தெரியாத ஒருவர் இந்தக் கேள்வியை மீண்டும் எழுப்பியிருக்கிறார்.

நேருவுக்குப் பிறகு

'நேருவுக்கு, வயோதிகத்திலோ அல்லது வேறெந்தக் காரணத்திலோ பதவிப் பொறுப்பை வகிக்க முடியாமல் போய்விட்டால், சர்க்காரை யார் நடத்துவது?' என்று அவர் கேட்கிறார்.

'ஆனால், நேரு இல்லாத இந்தியாவை கற்பனை செய்து பார்ப்பதே கடினமாயிருக்கிறது' என்றும் அவர் கூறுகிறார்.

சிலர் கூடி......!

'வயோதிகத்தினாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ, நேருவினால் முடியாவிட்டால், சில காங்கிரஸ்காரர்கள் ஒன்றாகக் கூடி, அவரது ஆலோசனைப்படி சர்க்காரை நடத்துவார்கள்,' என்றும் பதில் ஒன்று கூறிக்கொள்கிறார் அந்தக் கட்டுரையாளர்.

விலக விரும்புகிறேன்

'விலகிவிட விரும்புகிறேன்— என்று நேரு அண்மையில் தெரிவித்தபோதெல்லாம், காங்கிரஸ் ஸ்தம்பித்துப் போனதைப்போல்— பிதுப்பிடித்ததைப் போலாகிவிட்டது; இங்கேதான் காங்கிரஸ் கட்சி பலவீனமாயிருக்கிறது,' என்றும் கூறியிருக்கிறார், அந்த எழுத்தாளர்!

காந்தியார் காலத்திலிருந்து......

"இந்தப் பலவீனம், நெடுநாளைய பலவீனமாகும்; காந்தியார் காலத்திலிருந்துவரும் பலவீனமாகும்.

காந்தியார் விரும்பியது என்ன ?

"காந்தியார், 'காங்கிரஸ் தனது உள்ளடக்க ஆற்றலைக்கொண்டே உயிர் வாழ வேண்டும்—உலவ வேண்டும்—ஒருவர் அல்லது இருவரின் பலத்தினால் அல்ல' என்றே விரும்பினார்.

மற்றக் கட்சிகளையும்தான்

"நேரு பதவியைத் துறந்தால் என்ற நிலை, காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல—மற்றக் கட்சிகளையும் தான் கிலகுலையச் செய்கிறது.

நேருவுக்கு சமானமாய்...

"நேரு பண்டிதருக்குச் சமமான தலைவர்கள் மற்ற கட்சிகளிலும் தான் இல்லை.

அடுத்த வரிசையில்......

"நேருவுக்கு அடுத்த வரிசையில் நிற்கும் தலைவர்கள் இருக்கிறார்கள்; ஆனால், அவரைப் போன்ற பல அம்சங்களும் பொருந்திய ஒருவர் இல்லை," என்றும் அந்தக் கட்டுரையாளர், நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சீனப்பிரதமர் ஏன் சிந்திக்கமாட்டார்?

இந்தியாவுக்கு வருகை தந்து பல பகுதிகளைப் பார்வையிட்ட சீனப் பிரதமர், பக்ரா - நங்கலுக்கும் பண்டித நேருவுடன் சென்றிருக்கிறார்.

ரூ. 170 கோடி செலவில் கட்டப்படுவதும், 'உலகிலேயே மிகப் பெரிய அணைகளில் ஒன்று' எனக் கூறப்படுவதுமான பக்ரா - நங்கல் அணைக்கட்டில் பிரும்மாண்டமான 'கிரேன்'களும், இயந்திரங்களும் வேலை செய்வதை அவர் பார்வையிட்டார்.

அணைக்கட்டுத் தேக்கத்தினால் 1959 - 60ல் 1 கோடி ஏக்கா நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படுமென அவருக்குத் தகவல் தரப்பட்டிருக்கலாம்.

அணைக்கட்டில் நடக்கிற வேலைகளுக்குப் பயன்படுத்துகிற இயந்திரங்களையெல்லாம் குருஷலாய்க்கு பண்டிதர் விளக்கினாராம்!

இவைகளைக் கண்ணுற்ற சீனப் பிரதமர், அமைதியாகச் சிந்தனையில் மூழ்கியிருந்துவிட்டு, பிறகு, பண்டிதரிடம, 'இவைகள் என் மனதைக் கவர்ந்துவிட்டன,' என்று குறிப்பிட்டாராம்!

புதுடில்லி, ஜன. 3—

புதிய மாநில அமைப்புத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட 5 மண்டலக் குழுக்களின் முதல் கூட்டம் இம்மாதப் பிற்பகுதியில நடைபெறுமெனத் தெரிகிறது.

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

5—1—57 மாலை 5½ மணிக்கு, சென்னை 4-வதுவட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில், வண்ணை இராபின்சன் பூங்கா அருகிலுள்ள மணி கண்டமுதலி 6-வதுதெருவில், தோழர் டி. கே. சாமி தலைமையில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. கோவிந்தசாமி, மு. பெருமாள், மாணவி சற்குணம் ஆகியோர் பேசுவர்.

சென்னை அறிவியக்க மன்ற ஆண்டு விழா

5—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை 27-வது வட்டம் இடைப்பாளையம் அறிவியக்க மன்ற முதலாண்டு விழாக்கூட்டம், பிள்ளையார் கோவில் தெருவில் (ஒற்றைவாடை கொட்டகைக்கு அருகில்) தோழர் வே. அன்புமணி தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை—ஆர். எஸ். பாண்டியன், போளூர்-கே. சுப்பிரமணியம், ஆ. இராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

உத்தமபாளையம் தொகுதி தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்கு:

6—1—57-ல், உத்தமபாளையம் தொகுதி தி. மு. கழகக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொதுத் தேர்தல், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படுவதால், தொகுதி கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பஸ் போக்குவரத்து ஊழியர் தி. மு. க. தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்கட்கு:

7—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை - சேப்பாக்கம், அருணாசலம் ஆச்சாரி தெரு, எண். 13 தமிழ் மனை இல்லத்தில், சென்னை பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதற்கான நன்கொடை இரசீது விற்பனை குறித்து ஆராய, மேற்படி குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை பி. & சி. ஆலை தி. மு. க. தேர்தல் நிதிக்குழு உறுப்பினர்கட்கு:

6—1—57 பகல் 2 மணிக்கு, சென்னை பி. அண்டு. சி. ஆலை தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குழு உறுப்பினர் கூட்டம், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில நடைபெறும். வரவு—செலவுக் கணக்குகள் பரிசீலிக்கப்படும்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 5-1-57 பகல் 2-மணிக்கு

போலீஸ் கமிஷனர் உயர்திரு எப். வி அருள் அவர்கள் தலைமையில்

ரிக்ஷா, சைக்கிள், விளையாட்டுப் போட்டிகள்

மாலை 6-30 மணிக்கு : திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்

திருமதி பி எஸ் ராஜாம்பாள் கோவிந்தராசன் எம்.ஏ எல் டி., ஜே. பி. தலைமையில் **கே. பி. சுந்தராம்பாள்—பாட்டு**

தனிப்பகுதி : ரூ. 3, 2, 1, அணா 8. திறந்தவெளி இலவசம்

பொருட்காட்சி பகல் 2 மணி முதல் இரவு 9 மணிவரை.

பிரவேசக் கட்டணம் 0—5—0

எம் எஸ் மோகன்—காண்டிராக்டர்

கழகக் கூட்டம்

★

பண்ருட்டி :

புதுரோட்—பழைய தில்லை டாக்கீஸ் எதிரில்

5—1—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஜே. தருமாஞ்சுலு

பேசுவோர் :

கி. மனோகரன்

சிற்றுளி-சுப்பிரமணியம்

வி. கிருஷ்ணமூர்த்தி

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

ஜன. 11 : குமாரபாளையம் (சேலம்)

12 : கோவை

13 : காலை – புதுக்கோட்டை; மாலை—தஞ்சை (கூட்டம்); இரவு—தஞ்சை (நாடகம்)

14 : சென்னை

16—17 : தேர்வுக் குழு சுற்றுப்பயணம்

19 : வலவனூர்

20 : காலை – திருவாரூர் (ஆசிரியர் மாநாடு); மாலை – அம்மையப்பன்

24 : புதுவலசு

27 : நாகை

[கூட்டங்களில் தேர்தல் நிதி தரப்படும்]

பெங்களூர் மாவட்டக் கழக உறுப்பினர்கட்கு:

"6—1—57 மாலை 5 மணிக்கு, பெங்களூர் டாக்டர் இராயன ரோடிலுள்ள தோழர் மா. மன்னன் இல்லத்தில் (பின்னி ஆலைக்கு அருகில) பெங்களூர் மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும. தேர்தல் நிதி, வருகிற பொதுத் தேர்தலில் கோலார் தங்கவயலில் கழகம் போட்டியிடுதல், மாவட்டக் கழக வரவு-செலவு கணக்கு ஆகிய பிரச்சினைகள் ஆய்வுககெடுத்துக்கொள்ளப் படும். எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும் மாவட்டப் பிரதிநிதிகளும தவறாது வருகைதரக கோருகிறேன"

என்று பெங்களூர் மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி அறிவிக்கிறார்.

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

6-1-57 காலை 9 மணிக்கு சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு தி மு. கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

சென்னை 36-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு:

6-1-57 காலை 10 மணிக்கு, வடக்கு தியாகராய நகரில் தி. மு. கழகக் கிளை துவக்குவதைபொருட்டு, சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில், 36-வது வட்டக் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கோடம்பாக்கம் பெருஞ்சாலை, எண் 95, தோழர் ஏ. இ. இராசரத்தினம் இல்லத்தில் நடைபெறும். அது போது கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலும் நடைபெறும்.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

6-1-57 பகல் 2 மணிக்கு சென்னை 37-வது வட்டம் இராயப்பேட்டை தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

சென்னை - வண்ணை அண்ணா படிப்பக உறுப்பினர்கட்கு:

6—1—57 காலை 9 மணி அளவில், தோழர் எம். சேர்மன் தலைமையிலும் தோழர் ச. பெ. தங்கையா முன்னிலையிலும், மேற்படி படிப்பகச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்ட இருப்பதால், அன்று குறிப்பிட்ட நேரத்தில், படிப்பகத் தோழர்கள் அனைவரும் படிப்பகப் பணி மனைக்கு வந்து சேரக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை முத்தமிழ் மன்ற உறுப்பினர்கட்கு:

6-1-57 காலை 9 மணிக்கு, மேற்படி மன்றப் பணிமனையில் (சாலை விநாயகர் கோயில் தெரு) மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். மன்ற எதிர்கால நடவடிக்கைகள், பொங்கல் விழா குறித்து ஆலோசிக்கப்படும்.

அம்பேத்கார் மறைவு அனுதாபக் கூட்டம்

6—1—57 மாலை 5 மணிக்கு சென்னை—பெரம்பூர் ஏரி மைதானத்தில, திரு. என். சிவராஜ் (அ. இ. தா. ச. தலைவர்) தலைமையில் அம்பேத்கார் மறைவு அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெறும். திரு சி. இராஜகோபாலாச்சாரியார், வீ. விராசாமி எம் பி., எஸ். சி. சி. அந்தோணி எம்.எல் ஏ., கண்ணதாசன் ஆகியோர் பேசுவர்.

★★★★-★★★★-★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★-★★★★★

சென்னை 8-வது வட்டம் மக்கள் மன்றச் சார்பில்

தி.மு.க. தேர்தல்நிதி சிறப்புக்கூட்டம்

6—1—57 ஞாயிறு மாலை 5-மணிக்கு

பெத்துநாய்க்கன்பேட்டை—அம்மன் கோயில் தெரு

டாக்டர் குருசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளியில்

தலைவர் : நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி**

பேசுவோர் :

கி. மனோகரன் —'உலகச் சூழ்நிலையில் நாம்'

கண்ணதாசன் —'அ' முதல் 'ன்' வரை

சு. சந்திரசேகர்

★

நுழைவு நன்கொடை: ரூ. 1; அணா 8

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.